# அணிந்துரை

தமிழ் மொழியில் இன்றைய இசைப்பாடல்கள் கீர்த்தனை என்ற அமைப்பிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற மூன்று அங்கங்களைப் பெற்றுப் பாடுபவர் மனக் கற்பனைக்கு விரிவான இடங்கொடுப்பதால் கீர்த்தனை வகைகளுக்கே இசைக் கலைஞர்கள் பாடுவதில் முதலிடம் கொடுக்கிறார்கள்.

தொல்காப்பியம் தமிழில் இன்று உள்ள மூத்த இலக்கியம், இலக்கண நூலும் ஆகும். அந்த நூலில் பாடலுக்கு ஏற்ற செய்யுள் வகைகள் நான்கு என்றும், அவை அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கலிப்பாவின் உறுப்புக்களான தரவு தான் பின்னால் பல்லவி என்றும் துணைத்தரவு என்பது அநுபல்லவி என்றும், தாமிசைகள் என்பவை சரணங்கள் என்றும் உருவெடுத்தன என்று இசையியல் வல்லாளர்கள் ஆய்ந்து கூறுகிறார்கள்.

தமிழ் இசைக் கீர்த்தனையில் பாடுபொருள் முதலியவைகளுக்கேற்றவாறு பதம், தில்லானா, ஜாவளிகள் முதலிய வகைகள் உண்டு. எல்லாக் கீர்த்தனை வகைகளையும் கதைப் பின்னனியில் காட்டமுடியும் என்பதனால் கீர்த்தனையாசிரியர்கள் ஒரு கதையைக் கீர்த்தனைகளிலேயே பாடினார்கள்.

அருணாசல கவிராயர் இராமநாடகக் கீர்த்தனை, அசோமுகி நாடக கீர்த்தனை முதலியவற்றை இயற்றினார். அசோமுகி நாடகம் கந்தபுராணத்தைப் பின்பற்றியதாக இருக்கவேண்டும். அது கிடைக்கவில்லை. முந்நூறு ஆண்டுகள் இடைவெளியில் ஒரு நல்ல நாடக இலக்கியத்தைத் தமிழகம் தவள விட்டிருக்கிறது.

மாரிமுத்தாப்பிள்ளை அருணாசல கவிராயர் காலத்தில் வாழ்ந்தவராவர். அவர் நொண்டி நாடகம் இயற்றினார். அவருடைய கீர்த்தனைகள் மிகப்புகழ் பெற்றவை.

குறவஞ்சி நூல்களில் அருமையான பல கீர்த்தனைகள் அமைந்துள்ளன. குறவஞ்சிகள் என்றாலே இசைநாடகத் தமிழ்நூல்கள் தாம்.

கோபால கிருஷ்ண பாரதியார் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் பெரிய புராணச் சரித்திரங்களைக் கீர்த்தனை நாடக வடிவில் இயற்றினார். நந்தனார் சரித்திரம், இயற்பகை நாயனார் சரித்திரம், திருநீலகண்டர் சரித்திரம், ஆகியவற்றை அவர் இயற்றினார். நந்தனார் சரித்திரம் மட்டுமே நமக்குக் கிடைக்கிறது. கோபாகிருஷ்ண பாரதியாரின் மாணவராகிய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருக்கே மற்ற இரண்டு சரித்திரங்களில் சிற்சில கீர்த்தனைகள் மட்டும்தான் கிடைந்துள்ளன.

அவை நாடகப்பாங்கில் அமையாதுபோனாலும் பெரியபுராணக் கதைப்போக்கைப் பின்பற்றிச் செய்யப்பட்டிருக்கின்றன.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் காலத்திலேயே அப்பரடிகளின் கதையைக் கீர்த்தனை நாட வடிவில் ஒருவர் செய்திருக்கிறார். உ.வே.சா. அவர்கள் குறிப்பினால் அது நமக்குத் தெரிகிறது.

வேறு பலர் செய்த பெரிய புராணக் கீர்த்தனைகளும் இருக்கவேண்டும்.

கண்ணப்ப நாயானார் சரித்திரத்தை ஒருவர் கீர்த்தனை வடிவத்தில் தத்திருக்கிறார்.

சிவகதா காலட்சேபங்கள் செய்யும் வழக்கமுள்ள கலைஞர்கள் மேற்படி கீர்த்தனைகளைப் பாடியும் சில வேளைகளில் அபிநயித்தும் மக்கைப் பரவசப்படுத்தி இருக்கிறார்கள்.

ராமசாமி சிவனைப் பின்பற்றிய பாங்கிலேதான் நம் டி. பட்டம்மாள் பெரிய புராணக் கீர்த்தனைகள் இயற்றியிருக்கிறார். அறுபத்து மூவர் சரித்திரங்களுக்கும் கீர்த்தனைகள் பாடியுள்ளார். ஏற்கனவே திருவிளையால் புராண கீர்த்தனைகளையும் திருவாரூர் மூவராகிய தியாகையர், தீட்சிதர், சாஸ்திரிகள் கீர்த்தனைகளையும் பாடி வெளியிட்டுள்ளார்.

அறுபத்து மூவர் சரித்திரங்கள் இந்த நூலில் எளிய நடையில் கீர்த்தனை வடிவில் சொல்லப்பட்டிருக்கின்றன.

டி. பட்டம்மாளின் இசைப்புலமை குறித்து நான் கூறவேண்டியதில்லை. திரு. டி.ஆர் சுப்பிரமணியம், திரு டி.வி. கோபாலகிருஷ்ணன், திரு எஸ். கலியாணராமன், திரு எல். ராஜம், திரு. ராஜகுமார், பாரதி முதலிய பிரபல வித்துவான்கள் இவருடைய பாடல்களைப் பாடி வருவதிலிருந்தே இவர் பெருமையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

புதிய ராகங்களைக் கண்டுபிடிப்பதிலும், புதுமைகள் செய்வதிலும், புதுப்புது கீர்த்தனைகள் இயற்றுவதிலும், மாணவர்களைப் பயிற்றுவிப்பதிலும், தம் வாழ்க்கையைக் கழித்துள்ள இந்த மாதர் திலகத்துக்குக் கலைமாமணி விருதைத் தமிழக அரசு தந்து கவுரவித்துள்ளது.

இவருக்கு வித்வத் சபை முதலாகத் தமிழகத்தின் பல்வேறு அமைப்புக்கள் பரிசுகளும் பாராட்டுகளும் தந்துள்ளன. பல அரங்கங்களில் இசையில் கருத்துக் செயல்முறை விளக்கம் செய்து புகழ் பெற்றவர்.

பெரியபுராண கீர்த்தனைகள் எளிய நடையில் நன்கு அமைந்துள்ளன. சரித்திரங்களைச் சுருக்கமாகக் கீர்த்தனைகளில் அமைந்திருக்கிறார் திருமதி பட்டம்மாள்.

இவருடைய முயற்சியைப் பாராட்டுகிறேன். பட்டம்மாள் காட்டும் இவ்வழி இயல் இசையியல் வல்ல தமிழ் கற்ற கலைஞர்கள் நம் பண்பாடுகளின் விளக்கமாகிய சரித்திரங்களைக் கீர்த்தனை வடிவிலும் வேறு இசைப் பாவடிவங்களிலும் இயற்றுவதற்கு முன்வரவேண்டும். ஆனால் இக்காலத்தில் சுகரக்குறிப்புகளோடு இவ்வகையான இசை நூல்களை வெளியிட்டால் மட்டும் போதாது.

சுரக்குறிப்புகள் மாறுபடாமல் கீர்த்தனைகளில் இசை உருவத்தைத் திரிபு படாமல் பாதுகாத்து வைக்கும். ஆனால் இக்காலத்து பெரும்பாலான இசைக் கலைஞர்கள் குறிப்பாக

இளைஞர்கள் சுரக்குறிப்புகளை மட்டும் வைத்துக்ணெ்டு பாடம் பண்ணிக்கொள்ளத் தயங்குகிறார்கள். அதனால் இதுபோன்ற நூல்கள் நினைத்த அளவு பயன்படாமல் போய்விடவும் கூடும். இப்பாடல்களை ஒலி நாடாக்களில் நூலாசிரியரின் பாடாந்தரப்படி பாடிப் பதிவு செய்து வெளியிட்டுவிட்டால் இளைஞர்கள் சிறிதும் தயக்கமோ, கிரமமோ, இல்லாமல் பாடஞ்செய்து கொள்ளவும், பாடவும் முன்வருவார்கள், திருமதி பட்டம்மாள் அவர்களின் அருமையான திருவிளையாடல் கீர்த்தனைகளை வித்வான்கள் கற்றுப் பயின்று மேடைகளில் பாடுவதற்கு ஏராளமான பேர் முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

- நா. மகாலிங்கம்